TAMIL ... 25 APR 198
MADRAS-600 0..

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

---

திங்கட்கிழமை 1979 நவம்பர் 5

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள் விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### பரமக்குடி கோட்டத்தில் மராமத்துப் பணிகள்

* வினா எண் 101— திரு. என். வரதராஜன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) பரமக்குடி கோட்டத்தில் பொதுப்பணித்துறை மராமத்து வேலைகள் டெண்டர் விடப்படாமல் ஆஃபர் (Offer) முறையில் வேலைகள் செய்யப்படுகின்றனவா?

(ஆ) இவை மூலம் அரசுக்கு ஏற்படும் நன்மைகள் என்ன?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) பரமக்குடி கோட்டத்தில் பொதுப்பணித்துறை மராமத்து வேலைகளான செப்பனிடுதல் காலமுறை பராமரிப்பு, புதிய கட்டுமானப் பணிகள் முதலியன யாவும் ஒப்பந்தப்புள்ளி முறையிலேயே நிறைவேற்றப்படுகின்றன. ஆயினும் நெருக்கடி காலப் பணிகள்—அதாவது, புயல், வெள்ளம் மற்றும் வறட்சி நிவாரணப் பணிகள் அரசு அளித்துள்ள சில விசேட அதிகாரங்களின் அடிப்படையில் ''நியமனமுறை'' மூலம் நிறைவேற்றப்படுகின்றன. இம்முறை வழக்கமான முறையாக எல்லா நேரங்களிலும் செயல்படுத்தப்படுவதில்லை.

(ஆ) விருப்பறிவுப்பு முறையில் நெருக்கடி காலங்களில் மராமத்து வேலைகளை துரிதமாகச் செயல்படுத்த அரசால் முடிகிறது. இதனால் உயிர், பொருள் மற்றும் பயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்படுகின்றன. மேலும் வறட்சியினால் பாதிக்கப்பட்ட ஆயக்கட்டுதாரர்களுக்கும் கிராம மக்களுக்கும் வேலை வாய்ப்பும், ஓரளவு ஊதியமும் பெற வகை செய்யப்படுகிறது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடியில் மட்டும் அப்படி என்ன விசேஷம்? ஏன் அங்கு மட்டும் டெண்டர் இல்லாமல் ஆஃபர் முறையில் வேலைகள் கொடுக்கப்படுகின்றன? இதேபோல மற்ற இடங்களுக்கும் விடப்படுமா?

[1979 நவம்பர் 5

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, எங்கு புயல் வெள்ளம் ஏற்பட்டாலும் அங்கெல்லாம் இந்த ஆஃபர் முறையில் விடப் படும்.

திரு. க. மருதாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு என்னென்ன பணிகள் நியமன முறையில் ஒப்படைக்கப் படுகின்றன? அதற்கான காரணங்கள் என்ன என்று அறிவிக்க இயலுமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, புயல் வெள்ளம் போன்ற இயற்கை உற்பாதங்களுக்கு ஆளாக்கப்படும் நேரங்களில், ரோடுகள், மருத்துவ மனைகள், பள்ளிக்கூடக் கட்டிடங்கள் போன்ற இடங்களில் ஏற்படும் சேதங்களுக்கு நிவாரணம் அளிக்க போர்க் கால அடிப்படையில் வேலைகள் நிறைவேற்றப்பட வேண்டும். எனவே இப்பணிகள் நியமன முறையில் நிறை வேற்றப்படுகின்றன. டெண்டர் கேட்டு வேலைகள் கொடுக்க வேண்டும் என்றால் குறைந்த பட்சம் ஒரு மாத காலத்திற்குப் பின்னால்தான் ஒப்பந்தக்காரர்களிடம் வேலையை ஒப்படைக்க முடியும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, புயல் வெள்ளக் காலத்திலே மிக அவசரமாக சில நடவடிக்கைகள் செய்ய வேண்டியிருக்கிறது. அது உண்மைதான். ஆனால் சில பாதிப்புகளுக்குச் செய்ய வேண்டிய வேலைகள், அதிகமாகச் செய்யப்பட வேண்டிய பின் வேலைகள் எல்லாம் ஒரு ஆண்டு கூட கால நேரம் தேவைப்படுகிறது. அம்மாதிரியான வேலை களுக்கு டெண்டர் கேட்டு அரசு வேலைகளை அளிக்குமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே அரசு அவ்வாறுதான் வேலைகளை அளிக் கிறது.

## நாட்டரம்பள்ளித் தொகுதியில் மின்வாரியப் பிரிவு அலுவலகங்கள்

*வினா எண் 102—திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா !

(அ) வட ஆற்காடு மாவட்டம், நாட்டரம்பள்ளித் தொகுதி யைச் சேர்ந்த விஷமங்கலம், சுந்தரம்பள்ளி, கொரட்டி, வெங்களா புரம் ஆகிய ஊர்களில் தமிழ்நாடு மின்வாரியப் பிரிவு அலுவலகங் கள் திறக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளதா?

(ஆ) ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தால் இதுவரை ஏன் திறக்கப்படாமல் இருக்கிறது?